# Deposition of Witness

In the Court of the Principal District Judge, Vellore District.
S.C.No.138 of 2017
Prosecution Witness No.P.W.29 (L.W.53)

| | | | |
|---|---|---|---|
| Name | : Dr.Gowri Shankar | Caste | : BC |
| Father's Name | : R.Alagar Samy | Calling | : Associate Professor |
| Village | : Gandhi Nagar, Vellore -06 | Religion | : Hindu |
| Taluk | : katpadi | Age | : 52 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 03.02.2025.

(A1 to A6 present).

**முதல் விசாரணை தொடங்கிய நேரம் 02.10 P.M.**

நான் தற்போது வேலூர் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் இணைப் பேராசிரியராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 22.06.2015 அன்று அறுவை சிகிச்சை பிரிவில் வேலூர் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் 24 மணி நேர பணியில் இருந்தபோது, ஷமீல்பாஷா என்பவர் ஆமபூர் அரசு மருத்துவமனையில் இருந்து மேல் சிகிச்சைக்காக பரிந்துரைக்கப்ட்டு 22.06.2015 அன்று 04.10 மணியளவில் வேலூர் மருத்துவகல்லூரி மருத்துவமனையில் அவசர சிகிச்சை பிரிவில் அனுமதி செய்யப்பட்டார்.

பின்னர் அவர் 04.25 மணிக்கு Male டுரோமோ வார்ட்டுக்கு மாற்றப்பட்டார். அன்று நான் அறுவை சிகிச்சை நிபுணராக பணியில் இருந்தேன். அவரை பரிசோதித்தபோது தான் 6 தெரிந்த நபர்களால் (போலீஸ் இன்ஸ்பெக்டர்) 19.06.2015 அன்று 08.00 மணியளவில் பள்ளிக்கொண்டாவில் தாக்கப்பட்டதாக கூறினார்.

எங்களுடைய மருத்துவமனையானது ஒரு கற்பிக்கும் மருத்துவமனையாக இருப்பதால் வருகின்ற நோயாளிகள் அனைவரும் பார்க்கப்பட்டு பணி மருத்துவரால் verify செய்யப்பட்டு கையெழுத்திடப்படும். நோயாளி தனக்கு 30 நிமிடங்கள் நினைவு இழந்ததாக கூறினார். தனது வலது தோள்பட்டையை தூக்க முடியவில்லை என்று கூறினார். அவரை பரிசோதனை செய்தபோது அவர் சுயநினைவோடு இருந்தார். பல்ஸ் ரேட் 84 /1 நிமிடம். இரத்த அழுத்தம் 120/80 mmhg. அவரை கழுத்திலிருந்து பாதம் வரை பரிசோதித்தபோது கழுத்தின் பின்பகுதியில் வலி இருந்தது.

(Tenderness) வலது தோள்பட்டையில் கன்னிய காயம் இருந்தது. வலது கையில் வலியும், வீக்கமும் இருந்தது. சிராய்ப்பு காயம் வலது முழுங்கையில் இருந்தது. அதன் பிறகு அவருக்கு எக்ஸ்ரே எடுக்கப்பட்டது. எலும்பு முறிவு அறுவை சிகிச்சை நிபுணர் மற்றும் நரம்பியல் சிகிச்சை அறுவை சிகிச்சை பரிந்துரை கோரப்பட்டது. அவர்களின் பரிந்துரையின்படி எக்ஸ்ரே சர்வைகில் ஸ்பைன், எக்ஸ்ரே டார்சல்ஸ் ஸ்பைன், எக்ஸ்ரே ரைட் சோல்டர், எக்ஸ்ரே ரைட் hand, X-ray chest PA view மற்றும் சிடி சர்வைகல் ஸ்பைன், எம்ஆர்ஐ of the spinal guard எடுக்கப்பட்டன.

22.06.2015-ல் நான் மருத்துவம் பார்த்து நான் கையெழுத்திட்ட ஆவணம் ஏற்கனவே அ.த.சா.ஆ.51 ஆக குறியீடு செய்யப்பபட்டுள்ளது. 23.06.2015 மற்றும் 24.06.2015 ஆகிய நாட்கள் மற்றொரு அறுவை சிகிச்சை நிபுணரால் நோயாளி பரிசோதிக்கப்பட்டார்.

25.06.2015 அன்று எம்ஆர்ஐ மற்றும் சிடி ஸ்கேன் ரிப்போர்ட் பார்த்து எலும்பியல் அறுவை சிகிச்சை நிபுணரும், நரம்பயில் அறுவை சிகிச்சை நிபுணரும் right of the brachial plexus injury என்று கண்டறியப்பட்டு, மேல் சிகிச்சைக்காக சென்னை இராஜிவ்காந்தி பொது மருத்துவமனைக்கு பரிந்துரைக்கப்பட்டார். அப்போது பணியில் இருந்த அறுவை சிகிச்சை நிபுணர் அவரை பரிசோதித்து மேல் சிகிச்சைக்காக இராஜிவ்காந்தி பொது மருத்துவமனைக்கு பரிந்துரைத்தார்.

23.06.2015 மற்றும் 24.06.2015 தேதிகளில் நோயாளிக்கு நான் எந்தவித சிகிச்சையும் அளிக்கவில்லை. மற்றொரு மருத்துவர் சிகிச்சை அளித்தார். எந்த மருத்துவர் சிகிச்சை அளித்தார் என்று எனக்கு தெரியாது. 25.06.2015 அன்று நான் பரிசோதனை செய்து எலும்பு சிகிச்சை நிபுணர் மற்றும் நரம்பியல் மருத்துவருக்கு நான் பரிந்துரை செய்தேன். அ.த.சா.ஆ.49, 50, 51 ஆகியவைகள் என்னால் உண்மை நகல் என்று கையெழுத்திட்டு அலுவலக முத்திரையிட்டு குறியீடு செய்யப்பட்டுள்ளது. 30.07.2015 அன்று சிபிசிஐடி டிஎஸ்பி போலீசார் என்னை விசாரித்தார்.

**1 வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

என்னுடைய போலீசார் விசாரணையில் கு.வி.மு.ச. பிரிவு 161 வாக்குமூலத்தில் நான் 24 மணி நேர பணியில் இருந்ததாக சொல்லவில்லை என்றால் சரிதான். 22.06.2015 அன்று 04.10

மணிக்கு அனுமதி செய்யப்பட்டார் என்பதும் எனது கு.வி.மு.ச. பிரிவு 161 வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான். 04.25 மணிக்குமேல் நோயாளி டுரோமோ வார்ட்டுக்கு மாற்றப்பட்டார் என்று கு.வி.மு.ச.பிரிவு 161 வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான்.

போலீஸ் விசாரணையில் நோயாளி வேறு வார்ட்டுக்கு மாற்றப்பட்டார் என்று இருக்கிறதா என்றால் இல்லை. எந்த வார்டுக்கு மாற்றப்பட்டார் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். 6 நபர்களால் நோயாளி தாக்கப்பட்டார் என்று கு.வி.மு.ச.பிரிவு 161 வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான்.

30 நிமிடங்கள் நினைவிழந்திருந்தேன் என்று நோயாளி என்னிடம் கூறியதாக கு.வி.மு.ச. பிரிவு 161 வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான். ட்ரோமா வார்டில் நோயாளியை நான் அனுமதிக்கவில்லை என்றால் சரிதான். அவசர சிகிச்சை பிரிவில் எந்த மருத்துவர் அனுமதித்தார் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

அ.த.சா.ஆ.51–ல் நான் ஏற்கனவே சொன்னதுபோல் புற நோயாளிகள் இரசீதில் அட்மிட் என்ற வார்த்தை இல்லை என்றால் சரிதான். அ.த.சா.ஆ.51–ல் புற நோயாளி சீட்டில் 22.06.2015 என்ற பக்கத்தில் 22 என்ற தேதியில் திருத்தப்பட்டுள்ளது என்றால் சரிதான். அ.த.சா.ஆ.51ல் புற நோயாளி சீட்டில் AR made in என்ற எழுதியதை அடுத்து ஆம்பூர் என்று வேறொரு கையெழுத்தில் எழுதியிருக்கிறது

என்றால் இல்லை. அதை எழுதியது யார் என்றால் அவசர சிகிச்சை பிரிவு மருத்துவர்.

6 தெரிந்த நபர்கள் (போலீஸ்) என்ற வாசகம் புறநோயாளி சீட்டில் எந்த இடத்திலும் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். அ.த.சா.ஆ.51–ல் புறநோயாளி சீட்டில் போலீஸ் என்ற வார்த்தை உள்ளதா என்றால் இல்லை. போலீஸ் ஸ்டேசன் என்ற வார்த்தை கூட அ.த.சா.ஆ.51–ல் புறநோயாளி சீட்டில் இல்லை என்றால் சரிதான்.

அ.த.சா.ஆ.51–ல் புறநோயாளி சீட்டில் வலது புறம் ஒருபகுதி நகல் எடுக்கப்படாமல் விடுபட்டிருக்கிறது என்றால் சரிதான். அ.த.சா.ஆ.51 ல் புறநோயாளிகள் சீட்டில் தலைப்பில் முத்திரையிடப்பட்டிருக்கிற 25 ஜுன் என்பது எந்த ஆண்டு என்பது நகலில் எடுக்கப்படவில்லை என்றால் சரிதான்.

Attestation Officer ஆன நான் அ.த.சா.ஆ.51 ல் புறநோயாளிகள் சீட்டில் attest செய்திருக்கும் சீட்டில் ஆவணத்தின் வலது பக்க பதிவுகள் இல்லை என்பது குறித்து நான் குறிப்பிட்டு எழுதவில்லை என்றால் சரிதான். அ.த.சா.ஆ.51 ல் புறநோயாளிகள் சீட்டில் முதல் பக்கத்தில் attest செய்திருக்கும் சீட்டில் attested என்றோ true copy என்றோ எழுதவில்லை என்றால் சரிதான்.

அ.த.சா.ஆ.51 ல் புறநோயாளிகள் சீட்டில் attest செய்திருக்கும் சீட்டில் மருத்துவ அலுவலரின் கையோப்பம் என்ற இடத்தில் மருத்துவ அதிகாரி கையெழுத்திட்டுள்ளாரா என்றால் இல்லை. நோயாளியை குணமாகி சென்றாரா அல்லது மேல் சிகிச்சைக்கு அனுப்பப்பட்டாரா

என்று குறிப்பு எழுதி கையெழுத்து போட வேண்டும். அந்த குறிப்பை மருத்துவர் மேலே எழுதிவிட்டார்.

புறநோயாளி சீட்டில் மருத்துவர் கையெழுத்து இல்லை என்று கேட்டதற்கு புற நோயாளிகள் சீட்டு என்பது வேறு case sheet என்பது வேறு என்றும் இரண்டையும் ஒரு தாளில் வைத்து நகல் எடுத்துள்ளார்கள் என்றால் சரிதான். ஒரே பகுதியில் இரண்டு படிவங்களை வைத்து நகல் எடுத்திருந்ததால் நான் ஒரு இடத்தில் மட்டும் கையொப்பம் செய்திருக்கிறேன் என்றால் சரிதான்.

அ.த.சா.ஆ.51–ல் புறநோயாளிகள் சீட்டில் வலது பக்கம் cut ஆகியுள்ளது என்றால் புறநோயாளிகள் சீட்டையும் Admission sheet ஐயும் நகல் எடுத்து வைத்துக்கொண்டு அதில் போலீசாருக்கு தகுந்தாற்போல் எழுதப்பட்டிருக்கிறது என்றால் சரியல்ல. அ.த.சா.ஆ.51 ஆவணத்தை அசல் ஆவணங்களை பார்த்துதான் கையெழுத்து செய்தேன் என்றால் சரிதான். அந்த அசல் ஆவணங்கள் ஒன்றோடு ஒன்று ஒட்டியிருந்ததா என்றால் ஒன்றாக பின் அடிக்கப்பட்டிருந்தது.

அ.த.சா.ஆ.51 ல் attest செய்த இடத்தில் "it has been verified and found correct attested by the original" என்று எழுதவேண்டும் ஆனால் நான் எழுதவில்லை என்றால் சரிதான். அ.த.சா.ஆ.51 ல் நான் அசல் ஆவணங்களை பார்க்காமல் போலீசார் நகல் எடுத்து கொடுத்ததில் கையெழுத்திட்டேன் என்றால் சரியல்ல.

அ.த.சா.ஆ.51 ல் புறநோயாளி சீட்டிற்கு பின்பக்கம் உள்ள தகவல்களில் இடது பக்கத்தில் 22.06.2015 என்பதற்கு கீழாக 04.25 என்று பின்னிட்டு வேறொருவரால் எழுதப்பட்டிருக்கிறது என்றால்

சரியல்ல. 22.06.2015 என்ற தொடங்கப்பட்டுள்ள பக்கத்தில் முதல் வரியில் admitted with alleged history of என்று எழுதியுள்ள இடத்தில் 6 என்பது அடித்தம் திருத்தம் உள்ளது என்றால் இல்லை.

அ.த.சா.ஆ.51 ல் 22.06.2015 அன்று நான் எழுதியதாக உள்ள இடத்தில் எந்த தேதியில் attest செய்தேன் என்ற தேதியை குறிப்பிடவில்லை என்றால் சரிதான். அ.த.சா.ஆ.51 ல் 22.06.2015 அன்று நான் எழுதியதாக உள்ள இடத்தில் இறுதி வரியில் நான்கு என்று எழுதி வேறொருவரால் வேறொருவர் எழுத்து வடிவில் எழுதப்பட்டிருக்கிறது என்றால் அதை எழுதியது நான்தான் முதுநிலை மருத்துவ மாணவர் எழுதி அதை நான் சரிபார்த்து கையெழுத்திட்டேன்.

அ.த.சா.ஆ.51–ல் முதுநிலை மருத்துவ மாணவர் எழுதி அதை நான் சரிபார்த்து கையெழுத்திட்டேன் என்று குறிப்பிட்டுள்ளேனா என்றால் அ.த.சா.ஆ.51 ல் முழுமையானது இல்லை. இதனுடைய தொடர்ச்சியான ஆவணத்தில் உள்ளது. அது இந்த அ.த.சா.ஆ.51ல் இருக்கிறதா என்றால் இல்லை.

Case sheet–ன் தொடர்ச்சி அ.த.சா.ஆ.49 ல் உள்ளது. அ.த.சா.ஆ.49–ல் தொடர்ச்சியான எண்ணிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. அ.த.சா.ஆ.49–ல் இரண்டாவது பக்கத்தில் எத்தனை விதமான கையெழுத்து உள்ளது என்றால் இரண்டு விதமான கையெழுத்துக்கள் உள்ளது. அ.த.சா.ஆ.49 மருத்துவர் வினோத்குமார் வழங்கியது, அதற்கும் எனக்கும் எந்த தொடர்பும் இல்லை என்றால் சரியல்ல. அதை குறித்து நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

அ.த.சா.ஆ.49-ல் உடல் ஆராய்வு என்று உள்ள இடத்தில் 3 என்ற உள்ளது என்றால் சரிதான். அது page-ஐ குறிப்பது அல்ல sheet-ஐ குறிப்பது. Case sheet ஆவணங்களில் பக்க எண் போட்ட பின்புதான் நகல் எடுத்தோம் என்றால் சரிதான். அ.த.சா.ஆ.49-ல் நீல மையில் பக்கம் 2 என்று எழுதப்பட்டிருக்கிறது என்றால் சரிதான்.

போலீசார் கேட்டுக்கொண்டதற்கு இணங்கி தேவையானவற்றை எழுதி வழக்கிற்காக தேவையான தகவல்களை ஆங்காங்கே இடைச்செருகல் செய்து அதன் பிறகு நகல் எடுத்து அசல் ஆவணங்கை மறைத்துவிட்டு இதில் அசலை பார்த்து attestation செய்ததாக பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

அ.த.சா.ஆ.51 மற்றும் அ.த.சா.ஆ.49-ல் நான் attestation செய்ததில் ஒவ்வொரு ஆவணங்களில் மொத்த பக்கங்களை குறிப்பிட்டு எந்த ஆவணங்களிலும் நான் attestation செய்வில்லை என்றால் சரிதான். என்னுடைய கு.வி.மு.ச. பிரிவு 161 வாக்குமூலத்திலும், நான் attestation செய்தேன் என்று சொல்லவில்லை என்றால் சரிதான்.

நான் அசல் ஆவணங்களை மறைத்து பொய்யான ஆவணங்களை நகல் எடுத்து 30.07.2015-க்கு பிறகு தான் போலீசாரிடம் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. ஆம்பர் மருத்துவ மனையில் போடப்பட்ட AR-ஐ நான் பாக்கவில்லை என்றால் சரிதான். நான் AR வரவில்லை என்று இந்த நீதிமன்றத்தில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

புறநோயாளி சீட்டில் ஆம்பூர் மருத்துவமனையில் இருந்து வந்த AR–ன்படி நான் AR entry என்னிடம் காட்டப்படவில்லை referral slip மட்டுமே என்னிடம் காட்டினார்கள். ஒருவரின் AR–ஐ போட்டபிறகு அதை வைத்துக்கொண்டு referral sheet மட்டுமே அனுப்புவார்கள் என்றால் சரிதான்.

Referral sheet–ல் கேசுவாலிட்டி பணி மருத்துவர் நோயளிக்கு ஏற்பட்ட காயங்களை குறிப்பிடவில்லை என்றால் சரிதான். அ.த.சா.ஆ.51–ல் புறநோயாளி சீட்டில் Injury as per AR என்று இருக்கிறது என்றால் சரிதான். அ.த.சா.ஆ.49–ல் எல்போ ஸ்செல்லிங் அப்ரேஷன் (சிராய்ப்பு காயம்), இரண்டாவதாக எழுதியிருப்பது என்ன என்று தெரியவில்லை, மூன்றாவதாக எழுதியிருப்பது contusion.

AR–ல் இல்லாத காயங்களை காவல் துறையினர் கேட்டுக் கொண்டதற்கு இணங்க பொய்யான ஆவணங்களை தயாரித்து நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வலது கையில் எக்ஸ்ரே எடுத்து ஆவணம் உள்ளதா என்றால் தெரியாது. எக்ஸ்ரே எடுக்கப்பட்டுள்ளதா என்றால் தெரியும்.

எக்ஸ்ரேயின் கருத்துரு பெறப்பட்டதா என்றால் opinion case sheet–ல் எழுதிவிடுவார்கள். எக்ஸ்ரே–யின் image–ல் பார்ப்பார்களா print தருவார்களா என்றால் print தருவார்கள். ஒவ்வொரு துறை வல்லுநரும் அவர்களுக்கு தேவைப்பட்ட எக்ஸ்ரே எடுப்பார்கள். அதை பார்த்து அவரவர்களின் கருத்துரைகளை அளிப்பார்கள்.

அ.த.சா.ஆ.50–ல் எத்தனை எக்ஸ்ரே எடுக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் 5 எக்ஸ்ரேக்கல் எடுக்கப்பட்டுள்ளது.

மாலை 04.15 மணிக்கு இடைவேளைக்காக விசாரணை சிறிது நேரம் ஒத்தி வைக்கப்படுகிறது.

**மீண்டும் விசாரணை தொடங்கிய நேரம் 04.20 p.m.**

ரேடியாலஜி ரிப்போர்ட் அனைத்தும் case sheet–வுடன் இணைக்கப்பட்டிருக்கும். போலிஸ் விசாரணையில் ரேடியாலஜிஸ்ட் ரிப்போர்ட் அனைத்தும் கேஸ் ஷீட்டில் இணைக்கப்பட்டிருக்கும் என்று சொல்லவில்லை என்றால் சரிதான்.

எங்களுடைய மருத்துவ சிகிச்சைக்கான அனைத்து அசல் ஆவணங்களும், கல்லூரி முதல்வரின் ஆணைப்படி அழிக்கப்பட்டுள்ளன. என்னை போலிசார் விசாரிக்கும்போது அசல் ஆவணங்கள் என்னிடம் இருந்ததா என்றால் ஆவணங்கள் அழிப்பதற்கு முன்னர் என்னை விசாரித்தார்கள்.

2023–ல் தான் ஆவணங்கள் அழிக்கப்பட்டது. அசல் ஆவணங்களை போலிசார் கேட்டு வாங்கவில்லையா என்றால் அதை என்னிடம் கேட்கவில்லை. நான் போலிசாரிடம் எந்த ஆவணத்தையும் கொடுக்கவில்லை. மெடிக்கல் ரிக்கார்டு ஆபிசர் கொடுத்திருப்பார்.

அசல் ஆவணங்களை அழிப்பதற்கு எங்களுடைய மருத்துவ முதல்வர் ஆணை வழங்கியுள்ளார். 2015 வருடத்திய மருத்துவ ஆவணங்களை அழிப்பதற்கான எந்த ஆணையையும் இந்நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவில்லை என்றாலும், அசல் ஆவணத்தை நாங்களே வைத்துக்கொண்டு போலிசாரிடம் துணை போகவேண்டும் என்ற எண்ணத்தில் இந்நீதிமன்றத்தில் அசல் ஆவணம் அழிக்கப்பட்டது என்று பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மெடிக்கல் ரிக்கார்டு ஆபிசர் என்பவரும் ஆவணங்களை அழித்ததாகவோ, அதற்கான ஆணை இருப்பதாகவோ இந்நீதிமன்றத்தில் எவ்வித தகவலும் தெரிவிக்கப்படவில்லை என்றும், அதனால் உண்மையான ஆவணங்களை மறைத்து இந்நீதிமன்றத்தில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 19.06.2015 க்கு பின்னர் காவல்துறையினர் எங்கள் மருத்துவமனையிலும், ஆம்பூர் மருத்துவமனையை அணுகி ஆவணங்களை பார்வையிட்டது எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது.

அ.சா.ஆ.49 முதல் அ.சா.ஆ.51 வரையிலானது குற்றவியல் வழக்கிற்கு தொடர்புடையது என எனக்கு தெரிந்து அதில் போலிசாருக்கு உதவி செய்யவேண்டி அவர்களால் கொடுக்கப்பட்ட ஆவணங்களில் உண்மை நகலை பார்க்காமலேயே நான் Attestation செய்து இந்நீதிமன்றத்தில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

19.06.2015 க்கு பின்னர் ஆம்பூர் அரசு மருத்துவமனையில் இருந்து கொடுத்து அனுப்பப்பட்ட AR and patient copy ஆகியவற்றை 22.06.2015 ல் இருந்த புறநோயாளி பிரிவில் பணியாற்றிய மருத்துவரிடம் கொடுத்து அதை பார்த்து தான் அவர் காயங்களின் உடைய எண்ணிக்கையை கொடுத்திருக்கிறார் என்றும், அதற்கு பின்னிட்டு ஆவணங்களை திருத்தியதால் ஆம்பூர் அரசு மருத்துவமனையில் இருந்து கொடுத்து அனுப்பப்பட்ட ஆவணங்கைளயும் எங்கள் மருத்துவமனையில் இருந்த ஆவணங்களையும் அழிதது இருப்பதாக இந்நீதிமனற்த்தில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

19.06.2015 க்கு பின்னர் காவல்துறையினரால் பெறப்பட்ட மருத்துவ ஆவணங்களின் இல்லாதவற்றையும், இருப்பதாக சொல்ல வேண்டும் என்று போலிசார் கேட்டுக் கொண்டதற்கிணங்க ஆவணங்களை திருத்தியது தெரிந்து விடக்கூடாது என்பதற்காக உண்மையாக ஆவணங்களையும் அழிக்கப்பட்டன என்று ஒரு பொய்யான தகவலை இந்நீதிமனறத்தில் சொல்லி பொய் சாட்சி அளித்துள்ளேன் என்றால் சரியல்ல.

22.06.2015 அன்று மருத்துவமனையில் சேர்க்கப்பட்டதாக சொல்லப்படும் ஷமில்பாஷாவை மருத்துவமனையில் Taurama ward சேர்க்கவேண்டிய அவசியம் இல்லை என்றும், அப்படி இருந்தும் அவசர சிகிச்சை பிரிவில் சேர்க்காமல், போலிசார் கேட்டுக் கொண்டதற்கிணங்க நான் Taurama ward ல் சேர்த்து ஆவணங்களை

திருத்தி எழுதியிருக்கிறேன் என்றும், நான் இந்நீதிமன்றத்தில் பொய் சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**2 முதல் 4 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1ம் எதிரியின் தரப்பு குறுக்கு விசாரணையை ஏற்றுக் கொள்கிறார்.

**5ம் மற்றும் 6ம் எதிரிகளின் தரப்பில் குறுக்கு விசாரணை**

1ம் எதிரியின் தரப்பு குறுக்கு விசாரணையை ஏற்றுக் கொள்கிறார். அனுமதியுடன் தொடர் குறுக்கு விசாரணை.

CT scan, Radiologist, X-ray ஆகியவைகளை வெவ்வேறு பிரிவில் எடுப்பார்கள் என்றால் சரிதான். அந்த அந்த பிரிவில் உள்ள technician அதை எடுத்து கொடுப்பார். ஒவ்வொரு பிரிவில் உள்ள மருத்துவர்களும் அது சம்மந்தப்பட்ட அறிக்கையை கொடுப்பார்கள் என்றால் சரிதான். அரசு மருத்துவமனையில் case sheetல் அது சம்மந்தப்பட்ட கருத்து எழுதப்படும்.

CT scan, Radiologist, X-ray ஆகியவற்றை பார்த்து தான் மருத்துவர் கருத்துரை வழங்க இயலும் என்றால் சரிதான். சிபிசிஐடி போலிசார் என்னை விசாரித்தபோது CT scan, Radiologist, X-ray போன்ற பிலிம்களை கொடுத்தேனா என்றால் கொடுக்கவில்லை. Contusion, swelling போன்றவற்றிற்கு கலர், description, அளவு போன்றவற்றை குறிப்பிட்டு சொல்லவேண்டும் என்றால் சரிதான். Contusion x-rayல் தெரியாது. எலும்பு முறிவு தான் தெரியும்.

என்னுடைய துறை சம்மந்தப்பட்ட விஷயங்களை தான் பார்த்தேன். மற்ற துறை சம்மந்தப்பட்ட அந்த துறை நிபுணர்கள் பார்ப்பார்கள். அசல் ஆவணத்தை பார்க்காமல் நான் Attestation செய்துள்ளேன் என்றால் சரியல்ல. காயங்களின் வண்ணத்தையோ, அளவையோ குறிப்பிடவில்லை என்று சொன்னால் சரிதான்.

நோயாளிக்கு சிகிச்சை அளித்தபோது நான் அரசு மருததுவர். தற்போது நான் Associate professor. நான் Associate professor இருக்கும்போது நாங்கள் மருததுவருக்கு suggestion சொல்வோம். பணி மருத்துவராக இருக்கும்போது Treatment and Diagnosis பற்றி சொல்வார்கள். Assistant professor நோயாளிகளை சிகிச்சை அளிப்பதற்கு தகுதி உள்ளவர்கள், சிகிச்சை அளிப்போம். சந்தேகம் ஏற்படின் அதற்கான சிகிச்சையில் பதிவு செய்யப்படும். நான் நோயாளிக்கு சிகிச்சை அளிக்க தகுதியற்றவன் என்றால் சரியல்ல. போலிசார் என்னை விசாரிக்கவில்லை என்றும், போலிசார் தானாக என்னுடைய வாக்குமூலத்தை பதிவு செய்துக்கொண்டார்கள் என்றும், நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

விசாரணை முடிவுற்ற நேரம் 04.55 p.m.

PERUMALSAMY MURUGAN

Digitally signed by PERUMALSAMY MURUGAN
Date: 2025.02.03 19:10:57 +0530